**தலைப்பு 155 – மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016**

---

தலைப்பு 155 – மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.1 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

---

## 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

### மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

---

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 28,927.14 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 25,979.98 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 2,947.16 மில்லியன் அதாவது 10.18 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 2,264.58 | 1,129.90 | 1,134.68 | 50.1 |
| மூலதனம் | 26,662.56 | 24,850.08 | 1,812.48 | 6.8 |
| **மொத்தம்** | **28,927.14** | **25,979.98** | **2,947.16** | **10.18** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 15501 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| **விடய இலக்கம்** | **அதிகூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **அதிகூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 15501 | 11.00 | 10.99 | 5.20 | 6.34 | 35.00 | 27.82 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் கீழான 04 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 106.94 மில்லியனாக இருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0165/000 | 0.39 |
| 6000/0000/00/0013/0120/000 | 1.30 |
| 6000/0000/00/0016/0110/000 | 104.87 |
| 6000/0000/00/0018/0109/000 | 0.38 |
| **மொத்தம்** | **106.94** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின் உபகரணத்தின் பதிவேட்டை அமைச்சானது பராமரித்திருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் உள்ளபடியான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 38 செலவின விடயங்களிற்காக மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளின் பயன்பாட்டின் பின்னரான சேமிப்புக்கள் உரிய செலவின விடயங்களுடன் தொடர்புடைய தேறிய ஏற்பாடுகளின் 10 சதவீதத்திலிருந்து 100 சதவீத வீச்சிலிருந்தது.

#### 3.2.2 வெளிப்படுத்தப்படாத பொறுப்புக்கள்

அபிவிருத்தி உதவி செலவின விடயம் 155-02-04-01-2202 இன் கீழ் தனியார் கம்பனியொன்றிற்கு நாணயக் கடிதத்தால் இலங்கை வங்கியினூடாக ரூபா 3,129.46 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும், இது 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் கொள்வனவு தொடர்பில் கடனின் தவணைக் கட்டணத்தையும் வட்டித்தொகையும் உள்ளடக்கியிருந்தது. மதிப்பீடுகளை தயாரிக்கும் போது இது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2.3 நடைமுறையல்லாச் சொத்துக்களின் நகர்வு அறிக்கை

நடைமுறையல்லாச் சொத்துக்களின் பதிவேட்டின் பெறுமதிகளுடன் நடைமுறையல்லாச் சொத்துக்களின் நகர்வின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மீதிகளானது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணனிகளிற்காக ரூபா 611,000 பெறுமதியான வெளிவாரி வன் பொருட்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான நகர்வின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், மீளாய்வாண்டின் போதான சேர்ப்பனவுகள், மூலதனச் சொத்துக்களின் முன்னேற்றம் மீள்மதிப்பீடு மற்றும் மூலதனச் சொத்துக்களின் முன்னேற்றம் மூலதனச் சொத்துக்களின் சுவீகரிப்பில் காட்டப்பட்ட பெறுமதிகளுடன் இணங்கியிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

15501 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.07 மில்லியன் ஆக இருந்தது. அந் நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 06 வருடங்கள் வரையான காலவீச்சில் இருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

2014 ஆம் ஆண்டில் இயந்திரங்களின் கொள்வனவு தொடர்பில் செலுத்த வேண்டிய ரூபா (ஐ.அ.டொலர் 20,326,539.40) ரூபா 3,027.03 மில்லியன் தொகைக் கட்டணம் மற்றும் வட்டியின் பெறுமதி ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

#### (அ) செயற்திட்டத்தின் குறைவாக பயன்படுத்திய / விளைவற்ற சொத்துக்கள்

#### (i) விளைவற்ற சொத்துக்கள்

பின்வரும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு புறநெகும பகுதி செயற்திட்டத்தின் கீழ் உரிய உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், விளைவற்றவையாகவிருந்தவை 2017 செப்தெம்பர் 27 வரையிலும் பயன்பாட்டிற்காக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

| மாகாணம் | மாகாண நிறுவனங்களின் பெயரும் நிர்மாண வகையும் | கிரயம் | மாகாண நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | |
| மேற்கு | திவுலுப்பிற்றிய நகர சபை - நகர சபை கட்டிடம் | 52.35 | 2015 திசெம்பர் 01 |

| | | | |
|---|---|---|---|
| மேற்கு | சித்தாவாக்க நகர சபை - நூலகக் கட்டிடம் | 36.70 | 2016 யூலை 04 |
| சப்ரகமுவ | தெரனியகல நகர சபை - பல்நோக்கு கட்டிடம் | 41.00 | 2016 ஏப்ரல் 11 |
| சப்ரகமுவ | யரியாந்தோட்ட நகர சபை - வாராற்ற சந்தை மற்றும் வசதி நிலையம் | 39.00 | 2017 பெப்ரவரி 01 |
| மத்திய | ரத்தோட்ட நகர சபை - வாராந்த சந்தை | 13.70 | 2015 மார்ச் 07 |
| வடமத்திய | கல்வெளா நகர சபை - வாராந்த சபை மற்றும் வசதி நிலையம் | 13.78 | 2014 ஆகஸ்ட் 23 |

**(ii) குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 495.73 மில்லியன் தொகையை செலவழிப்பதன் மூலம் பதினாறு கட்டிட செயற்திட்டங்கள் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டது. அத்தகைய கட்டிடங்களின் பின்வரும் பகுதி குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் குறைவாகப் பயன்படுத்தப்பட்டது.

| மாகாணம் | நகர சபை மற்றும் நிர்மாணங்களின் வகை | செயற்திட்டத்திற்கான மொத்த கிரயம் ரூபா.மில்லியன் | 2017 யூன் 01 இல் உள்ளவாறு குறைவாகப் பயன்படுத்திய கட்டிடத்தின் பகுதி |
|---|---|---|---|
| மேல் | பிரியகம நகர சபை - பலநோக்கு கட்டிடம் | 43.31 | குறைந்த கேள்வியால் அரங்கானது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| மேல் | மடுவல நகர சபை - பல்நோக்கு கட்டிடம் | 22.32 | ஆயள்வேத சிகிச்சையானது கிழமையில் ஒரு தடவை நடைபெறுகிறது. அதனால், மேற்கத்தய சிகிச்சை மற்றும் அரங்கானது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| மேல் | இதுதெவன நகர சபை - பல்நோக்கு கட்டிடம் | 23.83 | அரங்கை பயன்படுத்துவதற்கான போதிய கேள்வியின்மை |
| தெற்கு | நாகொட நகர சபை வாராந்த சந்தை மற்றும் பல்நோக்கு கட்டிடம் | 49.29 | நாற்று மேடை மற்றும் அரங்கினை பயன்படுத்தாமை |

| | | | |
|---|---|---|---|
| தெற்கு | கிறிந்த புத்துவெல நகர சபை - பேரூந்து தரிப்பிடம் மற்றும் வாராந்த சந்தையின் நிர்மாணம் | 36.37 | வாராந்த சந்தையிலுள்ள மீன் கடை மற்றும் அரங்கை பயன்படுத்தாமை |
| தெற்கு | திஸ்ஸமகாராம நகர சபை வாராந்த சந்தை | 50.00 | 71 சதுர மீற்றர்களை உள்ளடக்கிய 02 கட்டிடங்களை பயன்படுத்தாமை |
| தெற்கு | கட்டுவான நகர சபை - வாகன தரிப்பிடம் (மேல்மாடி கட்டிடத்தில் உள்ளடக்கம்) | 36.29 | 16 மாதங்களிற்கு மேலதிக காலப்பகுதிக்காக பயன்படுத்தாமை |
| சப்ரகமுவ | அயகம நகர சபை - வாராந்த சந்தை | 9.82 | குத்தகை வாடகை மதிப்பிடாமையால் 02 வருடங்களுக்கு மேலதிகமாக பயன்படுத்தாமை |
| சப்ரகமுவ | அயகம நகர சபை - பேரூந்து தரிப்பிடம் மற்றும் பல்நோக்கு கட்டிடம் | 34.65 | ஒரு வருடத்திற்கு மேலதிக காலப்பகுதிக்காக கடந்த போதிலும், கடைகளை குத்தகைக்கு வழங்குதற்கோ அரங்கை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| சப்ரகமுவ | இம்புல்வே நகர சபை - பல்நோக்கு கட்டிடம் | 35.30 | கட்டிடத்தின் பகுதியொன்று நகர சபையின் உப அலுவலகத் தொழிற்பாட்டிற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| மத்திய | கன்ஹகவட்ட கொறலய சகர சபை - தீன்கும்ஹ பல்நோக்கு கட்டிடம் | 22.73 | போதிய கேள்வியின்மையால் அரங்கை பயன்படுத்தாமை |
| மத்திய | கன்ஹவத்த கொறலய நகர சபை - குறுதெனியாவின் பல்நோக்கு கட்டிடம் | 23.73 | மருத்துவ சிகிச்சையை நடாத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தல் |
| மத்திய | குள்ளாஸ்கிறிய நகர சபை - பலநோக்கு கட்டிடம் | 40.43 | அரங்கு மற்றும் மருத்துவ சிகிச்சைகளினை பயன்படுத்தாமை |

| | | | |
|---|---|---|---|
| ஊவா | பண்டாரவளை நகர சபை - அலுவலக கட்டிடம் மற்றும் வாராந்த சந்தை | 35.85 | வாராந்த சந்தையானது அதற்கான நுழைவு வீதியானது போதியற்றதாக இருந்தமையாலும், அலுவலகமானது புதிய கட்டிடத்திற்கு மாற்றப்படாமையாலும் விளைவற்றிருந்தது. |
| வட மத்திய | கெவித்கொலாவ நகர சபை - வாராந்த சந்தை | 14.45 | கடை தொகுதிகளை பராமரிப்பதற்கு வணிகர்களிடமான கேள்வி போதியற்றதாகவிருத்தல் |
| வட மத்திய | பதவியா நகர சபை - அலுவலக கட்டிடம் | 17.36 | நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் பல்வேறுபட்ட குறைபாடுகள் |

**(ஆ) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம்**

வடக்கு வீதி இணைப்பு செயற்திட்டத்தின் (மேலதிக ஏற்பாடுகள்) கீழ் முல்லைத்தீவு மாவட்ட நிர்மாண ஒப்பந்தத்தின் 12.85 கிலோமீற்றர் வீதி தொகுதியானது செயற்திட்டம் ஆரம்பித்தலிருந்து 2 ½ வருடங்களின் பின்னர் வழங்கப்பட்டிருந்தது. அதன் நிர்மாணங்கள் 2017 மே 17 அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், பௌதீக செயன்முன்னேற்றமானது 2017 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு 75 சதவீதமாகவிருந்தது. மேலும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு வீதி தொகுதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடக்கப்பட்டிருந்ததுடன், இது 2016 ஆகஸ்ட் 09 இல் உள்ளவாறு பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதன் பௌதீக செயன்முன்னேற்றமானது 2017 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு 78 சதவீதமாகவிருந்தது.

**(இ) செயற்திட்டங்களை பூர்த்தி செய்ததன் பின்னரான நன்மைகள்**

**உள்ளூராட்சி பகுதி செயற்திட்டத்தின் (புறநெகும) அமுலாக்கம்**

(i) ரூபா 28.63 மில்லியன் தொகையை செலவழிப்பதன் மூலம் நிர்மாணிக்கப்பட பிலிந்த நுவரவிலுள்ள நீர் செயற்திட்டம் றெமுனவிலுள்ள நீர் செயற்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இயற்கை நீர் வளங்களை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட பிலிந்த நுவர நீர் செயற்திட்டத்தால் 360 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. நீர் வளப் பிரதேசத்தில் வாழுகின்ற அத்துமீறுவோர்களால் நீர் வளங்கள் சேதமாக்கப்பட்டதுடன் அதன் நீரானது பொருத்தமற்ற நிலையிலிருந்ததுடன் அதன் விளைவால் நீரானது கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

- றெமுனா நீர் வழங்கல் திட்டத்தின் நீர்த்தொட்டிக்கு இணைக்கப்பட்ட இலத்திரனியல் மோட்டார் குழாயினை செயற்படுவதற்கான இலத்திரனியல் அளவுக்கு போதியதாக இல்லாமையால் பொதுமக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்ட நிதியில் மனஹாலுப்பாலமே நகர சபையின் பிரதேசத்தில் ரூபா 2.82 மில்லியனை செலவழிப்பதன் மூலம் நிர்மாணிக்கப்பட்ட சுகாதார நிலையம் மற்றும் வட மத்திய மாகாணத்தில் திறப்பனவில் ரூபா 2.50 மில்லியனை செலவழிப்பதன் மூலம் நிர்மாணிக்கப்பட்ட சுகாதார நிலையம் போதிய நீர் வசதியின்மையால் பொதுமக்களுக்கு இலகுவாக சென்றடைந்திருக்காமையால் அவைகள் விளைவற்றிருந்தது.

**(ஈ) செயற்திட்டத்தின் விளைவால் சூழலுக்கு ஏற்பட்ட விளைவுகள்**

**கொழும்பு பெரும்பாக கழிவுகள் நீர் முகாமைத்துவச் செயற்திட்டம்**

(i) ஒப்பந்தத்தின் நிர்மாண வேலைகளை மேற்கொள்கையில் அண்ணளவாக 22 வீடுகள் சேதமாக்கப்பட்டிருந்ததுடன் இதில் 07 வீடுகள் 2017 ஆகஸ்ட் 07 ஆந் திகதியளவிலும் செயற்திட்டத்தால் திருத்தப்பட்டிருக்கவில்லை. அகழ்தல் நோக்கங்களின் போது சொத்துக்களை தகர்த்துவதற்கு தேவையான பாதுகாப்பான முறைமைகள் பயன்படுத்த வேண்டும். (உதாரணம் தடுப்புச் சுவரின் நிர்மாணம்) அத்தகைய அளவீடுகள் இன்மையால் பொது சொத்துக்களில் சேதத்தை ஏற்படுத்துவதை விளைவித்திருந்தது என அவதானிக்கப்பட்டது. இத்தகைய ஒப்பந்த செய்முறையின் இந்த வகையின் விளைவில் பிரதேசத்திலுள்ள மக்களுடன் தொடர்ச்சியான பிரச்சினைகள் மற்றும் நம்பிக்கையின்மையை எடுத்து சென்றதுடன் நிறுவகம் மற்றும் மக்களின் நடவடிக்கையால் இழப்பு ஏற்பட்டதுடன் இது எதிர்கால அபிவிருத்தியினை பாதகமாக பாதிக்கும்.

(ii) நிர்மாண பிரதேசத்தின் முக்கிய தளத்தில் அமைந்துள்ள வதிவிட சொத்து தொடர்பில் முன்னைய தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டும். ஆனால் அத்தகைய தகவல் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. உரிய அளவையானது மேற்கொள்ளப்பட்டதுடன் அத்தகைய தகவல்களானது சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்ட பின்னர் சேகரிக்கப்பட்டது. ஆகையால், சாதகமான பிரச்சினைகள் மற்றும் நிர்மாண வேலைகளின் விளைவுகள் தொடர்பாக போதிய கவனம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 செயலாற்றல்

**(அ) தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ உதவி நிலையம்**

(i) திண்ம கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக 2016 வருடாந்த மதிப்பீட்டிலிருந்து ரூபா 100 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இது நிதிப்பிரமாணத்தின் கீழ் மேலதிக ஏற்பாடுகள் மற்றும் மாற்றங்கள் ஏற்படுவதன் மூலம் ரூபா 334.31 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும், திரவ கழிவு தொடர்பாக தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கு போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீதோற்றமுல்லக கார்வோக் அளவீட்டிற்கு அருகிலுள்ள வதிவிடங்களை அகற்றுவதற்காக கொழும்பு மாநகர சபைக்கு இந்த செலவின விடயத்தின் கீழ் ரூபா 105 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கொலனாவ மற்றும் கொற்றிஹாவற்ற பிரதேசத்தை துப்பரவு செய்வதற்காக ரூபா 10.19 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. நிலைபெறுதகு ஒழுங்கமைப்புக்கள் திண்ம கழிவின் முகாமைத்துவத்தால்

கிடைக்கக் கூடியதாக இருந்திருக்கவில்லையென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(iii) கற்கைக்கான அல்லது ஆராய்ச்சிக்கான கவனமானது நிலைபெறுதகு திண்ம கழிவு முகாமைத்துவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அபிவிருத்தி பிரிவு**

**(i) பெலியற்ற நகர அபிவிருத்தி**

2014 ஆம் ஆண்டில் காணி மீட்சி மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 68 மில்லியன் தொகையானது வெலியற்ற நகரத்திற்கு நகர வசதிகள் வழங்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், எந்த நிர்மாணமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நகர வசதிகள் வழங்கும் நிலையத்திற்கு பதிலான வாகன தரிப்பிட இடத்திற்காக காணி தயார் செய்யப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட மொத்த முற்பண தொகையானது உள்ளபடியான செலவினமாக இல்லாதிருந்த போதிலும், அமைச்சின் கணக்கீட்டு அறிக்கைகளின் பிரகாரம். இது ஆண்டின் செலவினங்களாக கணக்கிடப்பட்டிருந்தது. இது 2017 செப்தெம்பர் 27 ஆந் திகதியளவிலும் ரூபா 68 மில்லியன் முற்பணத்தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

**(ii) பூர்த்தி செய்யப்படாமல் செயற்திட்டங்கள் இடைநிறுத்தியமை**

2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூர்த்தியாக்குவதற்கு திட்டமிடப்பட்ட 12 அபிவிருத்தி செயற்திட்டங்கள் பகுதியளவில் பூர்த்தி செய்து நிறுத்தப்பட்டிருந்தது. அதனால் அத்தகைய செயற்திட்டங்களிலிருந்து இன்றுவரை செலவு செய்த ரூபா 31.18 மில்லியன் தொகை பயனற்றவையாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| செயற்திட்டம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | பௌதீக செயன்முன்னேற்றம் | நிதிசார் செயன்முன்னேற்றம் | உள்ளபடியான செலவினம் |
| | % | % | ரூபா.மில்லியன் |
| **பலிபொல நகர அபிவிருத்தி** | | | |
| தகவல் தொழில்நுட்ப நிலைய கட்டிடத்தின் புனராக்கம் | 50 | 18 | 0.28 |
| ரீ.பீ தேனகானின் ஞாபகார்த்த சிறுவர் பூங்காவின் முன்னேற்றம் | 50 | - | 0.78 |
| **பாண்டுவாசுநுவர நகர அபிவிருத்தி** | | | |
| கெற்றிபொல நகர நடைபாதையில் மீதி வேலையை பூர்த்தியாக்கல் | 50 | 78 | 1.72 |
| **அக்கரைப்பற்று நகர அபிவிருத்தி** | | | |
| பொதுச்சந்தையின் நிர்மாணம் - கட்டம் 2 | 20 | - | 7.55 |

| | | | |
|---|---|---|---|
| அக்கரைப்பற்று மாநகர சபைக்கு சொந்தமான கலை கூடத்தின் நிர்மாணம்- கட்டம் 3 | 20 | 3 | 0.45 |
| நீர்ப்பூங்காவிற்காக உள்ளக இலத்திரனியல் வெளிச்ச முறைமை நிர்மாணித்தல் | 20 | 5 | 0.21 |
| **தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்** | | | |
| போறதீவு நூலக கட்டிட நிர்மாணம் | 50 | - | 1.93 |
| தாமன பிரதேச சபையின் சுற்றுலா விடுதியின் நிர்மாணம் | 20 | - | 1.44 |
| வேறுகல பிரதேச சபையின் சிறுவர் பூங்காவை நிர்மாணித்தல் | 60 | - | 2.95 |
| **அவசர பொறுப்பு அறவீட்டு வலையமைப்பின் நிகழ்ச்சி திட்டத்தின் முன்னேற்றம்** | | | |
| அம்பாறை நகர சபையிலுள்ள நெருப்பு மீட்சி பிரிவின் ஸ்தாபிப்பு | 30 | - | 2.42 |
| மட்டக்களப்பு நகர சபையிலுள்ள நெருப்பு மீட்சி பிரிவின் ஸ்தாபிப்பு | 30 | - | 8.22 |
| அக்கரைப்பற்று நகர சபையிலுள்ள நெருப்பு மீட்சி பிரிவின் ஸ்தாபிப்பு | 30 | - | 3.23 |
| **மொத்தம்** | | | **31.18** |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 35 | 28 | 07 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 04 | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 150 | 139 | 11 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 55 | 74 | - | 19 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | 01 | - | 01 | - |
| | மொத்தம் | **245** | **245** | **18** | **19** |

**(ஆ) ஏனைய நிறுவனத்திற்கு சொந்தமான மனித வளங்களை பயன்படுத்தல்**

அமைச்சின் கீழ் வருகின்ற இலங்கை உள்ளூராட்சி நிறுவனத்தின் 02 அலுவலர்கள் நிதி மோசடியில் ஈடுபட்டதுடன் அவர்கள் முறையான ஒழுங்காற்று விசாரணையின் கீழ் உட்படுத்தப்பட்டனர். எனினும், அவர்கள் அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை உள்ளூராட்சி நிறுவனங்கள் அவர்களுடைய சம்பளங்களை செலுத்தியிருந்தனர்.